வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—வான்மதி

தேதி 8.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மத்திய அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மகளிருக்கு அதிகாரமளித்தல் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- அனைத்து துறைகளிலும் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.
- டெல்லியில் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் 18 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டினார்.
- 10-ஆவது ஐசிசி டி-20 ஆடவர் கிரிக்கெட் உலக கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா, நியுசிலாந்தை இன்று எதிர்கொள்கிறது.

<u>பிரதமர்</u>

சர்வதேச மகளிர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் பாலின சமத்துவத்தை உறுதி செய்யும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 8-ஆம் தேதியை மகளிர் தினமாக கொண்டாட, கடந்த 1977-ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி இன்று கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், மக்களவை தலைவர், மத்திய உள்துறை அமைச்சர்,

புதுச்சேரி துணை நிலை ஆளுநர், மற்றும் முதலமைச்சர் உள்ளிட்டோர் பெண்களுக்கு மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் மத்திய அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மகளிருக்கு அதிகாரமளித்தல் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறி உள்ளார். வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்கு முக்கியத் துவம் பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா புதுடெல்லியில் பெண்களுக்கான இருசக்கர வாகன பேரணியை கொடி அசைத்து தொடக்கி வைத்தார். அவர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் கிராம பஞ்சாயத்துகள் முதல் நாடாளுமன்றம் வரை பெண்களின் சிறந்த நிர்வாகத்தின் மூலம் நாடு வளர்ச்சி அடைந்து வருவதாக கூறினார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அறிவியல், பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று கூறி உள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் நாடு, சமூகம் மற்றும் குடும்பத்தை காப்பதில் பெண்களின் பங்களிப்பு பாராட்டத் தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

<u>திரவுபதி முர்மு</u>

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கலந்து கொண்டு உரையாற்றினார்.

பெண்களுக்கு வாய்ப்புகள் மற்றும் ஆதரவு வழங்கப்பட்டால் அவர்கள் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறினார். இன்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி

ஒன்றில் உரையாற்றிய திருமதி முர்மு, தொழில் முனைவோர், பெரும் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பெண்கள் முன்னிலை வகித்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். மேலும் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாகவும் பணியாளர்களில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் முத்ரா யோஜனா, விஷன் சக்தி மற்றும் பேட்டி பச்சாவ்-பேட்டி படாவோ உள்ளிட்ட திட்டங்கள் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க வழிவகுத்துள்ளதாகவும் திருமதி முர்மு கூறினார். கல்வியில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாகவும், பள்ளிக் கல்வியில் பாலின சமத்துவத்தை நாடு அடைந்துள்ளதாகவும் விளையாட்டுத் துறைகளிலும் மாணவிகள் மிகச் சிறப்பாக செயல்படுவதாகவும் திருமதி திரவுபதி முர்மு, தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார். சர்வதேச மகளிர் தினம் பெண்களின் உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு, மற்றும் சாதனைகளை கொண்டாடுவதாகவும் தேசத்தை வளர்ந்த நாடாக மாற்றுவதில் பெண்கள் முன்னணியில் இருப்பது பெருமைக்குரிய விஷயம் என்றும் அவர் தெரிவித்தார்.

<u>சிபி ராதாகிருஷ்ணன்</u>

2 நாள் பயணமாக திரிபுராவில் உள்ள பல்கலைக்கழகத்தின் 14-ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள அம்மாநிலத்திற்கு சென்றுள்ள குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நடவடிக்கைகளை தொடர்ந்து வலுப்படுத்துவதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும் என்று கூறினார். பட்டமளிப்பு விழாவின் போது 2024-25-ஆம் கல்வி ஆண்டுக்கான

முனைவர் பட்டங்களை அவர் வழங்கினார். இவ்விழாவில் கலந்து கொண்ட அம்மாநில ஆளுநர் இந்திரசேன ரெட்டி நல்லு கூறுகையில் இளைஞர்கள் வேலை வாய்ப்பை உருவாக்குபவர்களாக மாறுவதன் மூலம் இந்திய பொருளாதாரத்தை உயர்த்த முடியும் என தெரிவித்தார்.

மேலும் இன்றைய மாணவர்கள் வளர்ந்த இந்தியாவின் எதிர்கால தலைவர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள் என்று அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மாணிக் சாகா விழாவின் போது குறிப்பிட்டார். திரிபுரா பல்கலைக்கழகம் ஓர் அறிவு சார் பல்கலைக்கழகம் என்றும் மாநிலத்தின் மனிதவள மேம்பாட்டில் முக்கிய பங்கு வகித்து வருவதாகவும் அவர் பெருமிதத்துடன் கூறினார். முன்னதாக, திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று காலை உதய்பூரில் உள்ள புனித திரிபுர சுந்தரி கோவிலில் பிராத்தனை செய்தார்.

மேற்கு வங்க மாநிலத்தில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நேற்று பங்கேற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்பு விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படவில்லை என்றும் இதுகுறித்து மாநில அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் மத்திய அரசு கூறி உள்ளது. மேற்கு வங்க மாநில அரசு குடியரசு தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாதது கண்டனத்திற்கு உரியது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

இந்நிகழ்ச்சி தொடர்பாக மேற்குவங்க அரசின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

<u>மோடி</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று புதுடெல்லியில், மொத்தம் 33 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

டெல்லியில் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் 18 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான மெட்ரோ ரயில் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். 5-ஆம் கட்ட விரிவாக்கத்தின் கீழ் 16 கிலோமீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள 3 புதிய வழித் தடங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். இந்த வழித் தடங்கள் தேசிய தலைநகரின் பல முக்கிய இடங்களுக்கு நேரடி இணைப்பை வழங்கும். நொய்டா, தெற்கு டெல்லி மற்றும் விமானநிலையத்திற்கு செல்லும் மக்களுக்கும் இணைப்பை மேம்படுத்தும்.

மேலும் மத்திய அரசு ஊழியர்களுக்கான பொது குடியிருப்பு விடுதி மறுமேம்பாட்டு திட்டத்தின் கீழ் 15 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டிட திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார். முன்னதாக பிரதமர் புதுடெல்லியில் சரோஜினி நகரில் உள்ள பொது குடியிருப்புகளுக்கான திறவுகோலையும், பெண் பயனாளிகளுக்கு வழங்கினார். மேலும் மகளிர் ஷ்ரம் ஜீவி தொழிலாளர்களுடன் திரு மோடி உரையாடினார்.

மெட்ரோ ரயில் டெல்லியின் உயிர் நாடியாக மாறி உள்ளது என்றும் பயணிகளின் பயண நேரத்தை கணிசமாக குறைக்கும் என்றும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனோகர் லால் கூறினார். மேலும் பிரதமர் மோடியின் தலைமையில் கடந்த 11 ஆண்டுகளில் மெட்ரோ ரயில் விரிவாக்கம் கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்த விரிவான வளர்ச்சியின் மூலம் அமெரிக்கா மற்றும் சீனாவை அடுத்து மெட்ரோ ரயில் சேவைகளில் இந்தியா உலகின் 3-ஆவது நாடாக மாறி உள்ளது என்றும் திரு மனோகர் லால் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு டோகன் சாஹூ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கிரிக்கெட்

இந்தியா மற்றும் இலங்கையில் கடந்த மாதம் 7-ஆம் தேதி தொடங்கிய 10-ஆவது ஐசிசி டி-20 ஆடவர் கிரிக்கெட் உலக கோப்பை தொடரின் இறுதிப் போட்டி இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே இன்று இரவு 7 மணிக்கு அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் தொடங்குகிறது. 3-ஆவது முறையாக உலக கோப்பையை வெல்ல இந்தியாவும், முதல் முறையாக வெல்லும் கனவோடு நியுசிலாந்தும் களமிறங்க உள்ளன. கடந்த 2007-ஆண்டு மகேந்திர சிங் தோனி தலைமையிலான இந்திய அணி இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி முதல் உலக கோப்பையை வென்றது. 2024-ஆம் ஆண்டு ரோஹித் சர்மா தலைமையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்க அணியை வீழ்த்தி 2-ஆவது உலக கோப்பையை இந்தியா கைப்பற்றியது குறிப்பிடத் தக்கது.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று இந்தியா கோப்பையைக் கைப்பற்றினால், 2 புதிய சாதனைகள் படைக்கப்படும். ஒன்று, இதுவரை நடந்த தொடர்களில் போட்டியை நடத்தும் நாடு கோப்பையை வென்றதில்லை என்ற வரலாற்றை மாற்றி அமைக்கும். மேலும் 3-ஆவது முறையாக உலக கோப்பையை வென்ற நாடு என்ற சாதனையையும் இந்தியா படைப்பதற்கான வாய்ப்புகள் மற்றும் ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பும் உள்ளது.

## ஏனாம்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, நாடு முழுவதும் 250 இடங்களில் அஸ்மிதா மகளிர் விளையாட்டு போட்டிகள் இன்று நடைபெற்றன. அந்த வகையில் ஏனாம் GMC பாலயோகி மைதானத்தில், அஸ்மிதா லீக் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. இந்த போட்டியில் சுமார் 80 மாணவிகள் பங்கேற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு மிஷன்

சக்தி ஒருங்கிணைப்பாளர் ரிப்கா ரோசலின் பரிசுகளை வழங்கினார். அப்போது பேசிய அவர் மகளிரின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில், விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகத் தெரிவித்தார்.

<u>கைலாஷ்நாதன்</u>

மாகேயில் மேல்நிலைப் பள்ளி ஒன்றில் நடைபெற்ற விழாவில் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு மடிக் கணினி வழங்கும் நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். அப்போது உரையாற்றிய அவர் டிஜிட்டல் அறிவு அவசியமான தற்போதைய காலத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மடிக் கணினிகள் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும் என்று கூறினார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அனைத்து பெண்களுக்கும் அவர் வாழ்த்து தெரிவித்தார். மேலும் மாகேயில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அரசு திட்டங்களை திரு கைலாஷ்நாதன் பட்டியலிட்டார். இந்நிகழ்ச்சியில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான விருதுகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் பரம்பத், மண்டல நிர்வாகி திரு அங்கித் குமார், தலைமை கல்வி அதிகாரி திருமதி தனுஜா, உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

எல் முருகன்

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் வரும் 11-ஆம் தேதி திருச்சியில் நடைபெற உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி மாநாடு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டில் 7 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கபடுவதாகவும் தேசிய ஜனநாயக கூட்டணி வலிமையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் 30-க்கும் மேற்பட்ட கட்சிகள் இக்கூட்டணியில் இணைந்திருப்பதாக டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.